
ஒன்றிணைந்த

# சுற்றாடற்கல்விப்பயிற்சி

மூன்றாம் வகுப்பு

ஆக்கியோன்
க. சி. குலரத்தினம்




பதிப்பாளர்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
1980 [விலை ரூபா 3-60

# ஒன்றிணைந்த
# சுற்றாடற்கல்விப் பயிற்சி

## மூன்றாம் வகுப்பு

ஆக்கியோன்

க. சி. குலரத்தினம்



பதிப்பாளர்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை ஆசிரியருக்கு] 1980 [விலை ரூபா 3-60

திருத்திய முதற் பதிப்பு: 1980.

[பாடவிதான அபிவிருத்தி நிலையம் C. D. C.
புதிதாகத் தயாரித்த பாடத்திட்டத்துக்கு அமையப்
புதிதாக எழுதப்பெற்றது]

Printed by Mr. Arumugam Subramaniam at Sri Subramania
Printing Works, 63, B. A. Thamby Lane, Jaffna
& Published by Sri Subramania Book Depot,
235, K. K. S. Road, Jaffna.

பெயர் ..........................................................

பாடசாலை ..........................................................

திகதி ..........................................

# பிள்ளைகள் கவனத்திற்கு

பிள்ளைகளே !

இந்தப் பயிற்சிப் புத்தகத்தில் அப்பியாசங்களைச் செய்து பழகு வதன்முன் வழிகாட்டியை நன்ருகப் படியுங்கள். அதன் பின்னர் கேட்ட கேள்விகளுக்கு விடைகள் எழுதிப் பழகுங்கள்.

## வழிகாட்டி

### மாதிரிப் பயிற்சி

1. பொருத்தமான விடையின் கீழ்க் கிறிடுக.

நாம் பாடசாலைக்குப் போவது ஏன் ?

(அ) அங்கே விளையாடித் திரிவதற்கு.

(ஆ) பாடசாலையை அழுக்குப் படுத்துவதற்கு

(இ) கவனமாகப் பாடங்களைப் படிப்பதற்கு

(ஈ) எமக்கு வேறு வேலை இல்லாதபடியால்

2. ஒரு சொல்லில் விடை எழுதுக.

எல்லாச் சத்துக்களும் உள்ள உணவு எது ?

பால்

3. விடை தருக.

தோட்டத்தில் உண்டாகும் காய்கறிகள் எவை ?

கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், பயற்றங்காய்.

4. விடை தருக.

உங்கள் விளையாட்டுப் பொருள்கள் இரண்டு.

பந்து பம்பரம்

5. பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமாக ஆம் அல்லது இல்லை என்று விடை எழுதுக.

(அ) திருவாத்திப் பூவின் நிறம் மஞ்சள். ஆம்

(ஆ) யாழ்ப்பாணத்தில் தேயிலை உண்டாகிறது இல்லை

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

நீர் கண்ட பழங்களில் பெரியது எது ?

தோடம்பழம், பலாப்பழம், மாம்பழம், பப்பாப்பழம், அன்னாசிப்பழம்.

7. வீடுகளில் தயாரிக்கப்படும் உணவுகள் எவை?

சோறுகறி, பிட்டு, அப்பம், இடியப்பம், தோசை, இட்லி;

8. கூட்டத்தில் சேராத ஒன்றின் கீழ்க் கீறிடுக.

கத்தி, உளி, அலவாங்கு, மண்வெட்டி, பென்சில்.

9. கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.

கரும்பு—இனிப்பு வேம்பு— கைப்பு

அண்ணா — மூத்தவர் தம்பி—இளையவர்.

10. விடப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

(அ) இரும்பை உருக்கிக் கத்தி செய்வார்கள்.

(ஆ) பொன்னை உருக்கி மோதிரம் செய்வார்கள்.

# அப்பியாசம் ஒன்று

I. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) பால் மிகவும் சிறந்த உணவு. ஏன் என்றால்,

1. அது வெள்ளை நிறமாய் இருப்பதால்.
2. அது அதிக விலை உள்ளதாய் இருப்பதால்.
3. அது இனிமையாய் இருப்பதால்.
4. அது சத்துள்ள உணவாய் இருப்பதால்.

(ஆ) இலங்கை ஒரு தீவு. ஏன் என்றால்,

1. அது மாங்காய் போன்ற வடிவம் உள்ளது.
2. அங்கே பல ஆறுகள் பாய்கின்றன.
3. அங்கே பல மலைகள் உள்ளன.
4. அதன் நான்கு பக்கமும் கடல்கள் உள்ளன.

(இ) எதனால் செய்யப்பட்ட ஆயுதங்கள் உறுதியானவை ?

1. இரும்பினால் செய்யப்பட்டவை.
2. செம்பினால் செய்யப்பட்டவை.
3. ஈயத்தால் செய்யப்பட்டவை.
4. அலுமினியத்தால் செய்யப்பட்டவை.

## II. ஒரு சொல்லில் விடை எழுதுக.

1. இலங்கையின் வேறொரு பெயர் என்ன? ........................
2. இலங்கையின் தலைநகரம் எது? ........................
3. முஸ்லிம்கள் தாய் மொழி எது? ........................
4. சைவசமயத்தவர் வணங்கும் இடம் எது? ........................
5. முஸ்லிம் மக்கள் வணங்கும் இடம் எது? ........................
6. உங்கள் வீட்டில் வயதில் மூத்தவர் யாவர்? ........................

## III. விடை தருக.

1. இலங்கையில் வாழும் வெவ்வேறு இனத்தவர்கள் யாவர்?

________________________________________

2. தபாற்கந்தோரில் நடைபெறும் வேலைகள் யாவை?

________________________________________

3. பலதரப்பட்ட அரச ஊழியர்கள் யாவர்?

________________________________________

4. தென்னையில் நாம் எடுக்கும் பிரயோசனங்கள் யாவை?

________________________________________

5. தோட்டத்துக்கு உதவும் பசளைகள் எவை?

________________________________________

## IV. விடை தருக.

1. மரத்தினுற் செய்யப்படும் தளபாடங்கள் இரண்டு.

........................................ ........................................

2. இறப்பரால் செய்யப்படும் பொருள்கள் இரண்டு.

........................................ ........................................

3. வீடு வேய உதவும் பொருள்கள் இரண்டு.

........................................ ........................................

4. உணவுத் தானியங்கள் இரண்டு.

........................................ ........................................

5. கண்ணுடியினுற் செய்யப்படும் பொருள்கள் இரண்டு.

........................................ ........................................

## V. பின்வரும் வினுக்களுக்குப் பொருத்தமாக "ஆம்" அல்லது "இல்லை" என்று விடை எழுதுக.

1. நயினுதீவுக்குப் புகைவண்டியிற் போகலாமா? ............
2. பசுமாட்டுக்குப் புகையூட்டிப் பாதுகாக்கலாமா? ............
3. யாழ்ப்பாணத்தில் தேயிலை பயிராகிறதா? ............
4. உமக்கு வாக்களிக்கும் உரிமை உண்டா? ............
5. பாடசாலையில் நித்திரை கொள்ளலாமா? ............
6. வீதிகளில் உணவுப்பொருளை உண்ணலாமா? ............
7. காற்றும் நீராவியும் சக்தி உள்ளவையா? ............

VI. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) அழுக்கு நிறைந்த பிராணி எது?

எருமை, பன்றி, பாம்பு, முதலை.

(ஆ) முக்கனிகளில் ஒன்று என்னும் பழம் எது?

மாம்பழம், தோடம்பழம், திராட்சைப்பழம், பப்பாப்பழம்.

(இ) யாழ்ப்பாணத்தில் சீமெந்துத்தொழிற்சாலை உள்ள இடம் எது?

பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, காங்கேயன்துறை, அச்சுவேலி.

(ஈ) ஒரு முறை மாத்திரம் பயன் தரும் மரம் எது?

பலா, மா, வாழை, தோடை.

(உ) நித்திரையால் ஓய்வு பெறும் உறுப்பு எது?

மூக்கு, காது, இருதயம், மூளை.

(ஊ) மிகவும் உயரமாக வளரும் மரம் எது?

வேம்பு, தென்னை, பூவரசு, வாழை.

(எ) இனிய ஓசை உள்ள பறவை எது?

மயில், குயில், கிளி, கோழி

(ஏ) துறைமுகம் உள்ள இடத்தை அறிவிப்பது எது?

கப்பல், மணிக்கூடு, வெளிச்சவீடு, காற்றாடி.

(ஐ) வானத்தில் உள்ளவற்றுள் சிறியது எது?

சூரியன், சந்திரன், பூமி, வியாழன், வெள்ளி.

## அப்பியாசம் இரண்டு

I. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) கைக்குட்டை தயாரிப்பதற்கு ஏற்ற துணி எது ?

1. பருத்தித் துணி
2. பட்டுத் துணி
3. கம்பளித் துணி
4. நைலோன் துணி

(ஆ) இலங்கையில் எல்லாச் சமயத்தவரும் வழிபடுவது எது ?

1. சிவனொளிபாத மலை
2. மடு மாதா கோயில்
3. நல்லூர் முருகன் கோயில்
4. மிகுந்தலை வெள்ளரச மரம்

(இ) இலங்கையில் வாழ்பவரின் அதிகமானோர் யார் ?

1. தமிழர்
2. சிங்களவர்
3. முஸ்லிம்கள்
4. பறங்கியர்

## II. ஒரு சொல்லில் விடை எழுதுக.

1. மனிதரால் இழுக்கப்படும் வாகனம் எது? ....................
2. எங்களுடைய பிரதான உணவுத்தானியம் எது? ....................
3. மோட்டார் வண்டியின் இயக்கத்துக்கு வேண்டிய பொருள் என்ன? ....................
4. குளிரான நாட்டில் வாழ்பவர் அணியும் உடை எது? ....................
5. உம்முடைய தாய் மொழி எது? ....................
6. கமக்காரனுக்கு நன்மை செய்யும் புழு எது? ....................
7. தபாலிலும் வேகமாகச் செய்தி தருவது எது? ....................

## III. விடை தருக.

1. நாம் காலையில் உண்ணும் பலகாரங்கள் எவை?

....................................................................

2. பெரியவர்கள் செய்யும் பலவித தொழில்கள் எவை?

....................................................................

3. கண்ணாடியினால் செய்யப்படும் பொருள்கள் எவை?

....................................................................

4. மரவேலை செய்வோரிடம் உள்ள ஆயுதங்கள் எவை?

....................................................................

5. பாத்திரங்கள் செய்ய உதவும் உலோகங்கள் எவை?

....................................................................

IV. பின்வரும் வினுக்களுக்கு விடை எழுதுக.

1. வண்டி இழுக்கும் மிருகங்கள் எவை ?

........................................ ........................................

2. உங்கள் ஊரில் உண்டாகும் தானியங்கள் எவை ?

........................................ ........................................

3. படரும் கொடிகளில் உண்டாகும் காய் கறிகள் எவை ?

........................................ ........................................

4. ஓலை தரும் மரங்கள் எவை ?

........................................ ........................................

5. உணவுக்குப் பயன் படும் கிழங்குகள் எவை ?

........................................ ........................................

V. கூட்டத்தில் சேராத ஒன்றின் கீழ்க் கீறிடுக.

1. பால், தயிர், முட்டை, வெண்ணெய், நெய்.
2. நாய், பூனை, மான், புலி, கரடி.
3. குளம், கேணி, ஏரி, குன்று, வாவி.
4. வடக்கு, கிழக்கு, வடமேற்கு, தெற்கு, மேற்கு.
5. கொக்குவில், நந்தாவில், மயிலிட்டி, இணுவில், நுணுவில்.
6. அட்டை, பாம்பு, நத்தை, தவளை, ஆமை.
7. சூரியன், சந்திரன், நட்சத்திரம், விமானம், மேகம்.
8. ஊர்காவல் துறை, சுன்னுகம், காங்கேயன் துறை, பருத்தித்துறை.
9. ஆற்றங்கரை, சோலை, மலையடிவாரம், கடற்கரை, நகரம்.
10. முத்திரை, போஸ்ற் காட், காசுக் கட்டளை, புத்தகம், தபாற் கட்டளை.



VI. படத்தைப் பார்த்து விடை எழுதுக.

1. இவற்றில் உள்ள கிழங்குகள் எவை ?

2. இவற்றில் உள்ள இலைக் கறிகள் எவை ?

3. இவற்றில் காய்க்கும் தாவரம் எது ?

4. இவற்றில் படரும் தாவரம் எது ?

# அப்பியாசம் மூன்று

I. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) நாம் அம்மம்மா என்று கூப்பிடுவது யாரை?

1. அப்பாவின் அம்மாவை
2. அம்மாவின் அம்மாவை
3. அம்மாவின் தங்கையை
4. அப்பாவின் அக்காவை

(ஆ) காய்கறிப் பயிர்கள் நடுவதற்கு ஏற்ற மண் எது?

1. செம்மண்
2. நரைமண்
3. உவர்மண்
4. வெண்மணல்

(இ) யாழ்ப்பாணத்தைக் குடாநாடு என்பது ஏன்?

1. அது வடக்கில் இருப்பதால்
2. அங்கே தமிழர் அதிகமாக வாழ்வதால்
3. அங்கே ஆறுகள் இல்லாமையால்
4. அதன் மூன்று பக்கமும் கடல் இருப்பதால்.

II. ஒரு சொல்லில் விடை எழுதுக.

1. தபாற் பெட்டியின் நிறம் யாது? ……………………

2. தண்டவாளம் எதனாற் செய்யப்பட்டது? ……………………

3. கூடு கட்டத் தெரியாத பறவை எது? ……………………

4. சட்டி பானை செய்ய உதவும் மண் எது? ……………………

5. பட்டுப் பூச்சி வளரும் செடி எது? ……………………

6. பசுவின் பிரதான உணவு எது? ……………………

III. விடை தருக.

1. தென்னந் துப்பினால் செய்யப்படும் பொருள்கள் எவை?

……………………………………………………

2. மாச்சத்து அதிகமுள்ள தானியங்கள் எவை?

……………………………………………………

3. புரதச் சத்துள்ள உணவுப் பொருள்கள் எவை?

……………………………………………………

4. உயிர்ச் சத்துள்ள இலைகள், கீரைகள் எவை?

……………………………………………………

5. பாலில் இருந்து பெறப்படும் பொருள்கள் எவை?

……………………………………………………

6. நாம் செய்திகளை அறியும் சாதனங்கள் யாவை?

……………………………………………………

IV. பின்வரும் வினுக்களுக்கு விடை எழுதுக.

1. கடற்கரையில் வளரும் தாவரங்கள் இரண்டு

........................................ ........................................

2. கமக்காரர் உபயோகிக்கும் ஆயுதங்கள் இரண்டு

........................................ ........................................

3. களி மண்ணுல் செய்யப்படும் பாண்டங்கள் இரண்டு

........................................ ........................................

4. பாத்திரங்கள் செய்ய உதவும் உலோகங்கள் இரண்டு

........................................ ........................................

5. ஆபரணங்கள் செய்ய உதவும் உலோகங்கள் இரண்டு

........................................ ........................................

V. பின்வரும் வினுக்களுக்குப் பொருத்தமாக "ஆம்" அல்லது "இல்லை" என்று விடை எழுதுக.

1. நாம் கிளிநொச்சிக்குப் பஸ் வண்டியிற் போகலாமா? ........
2. மட் பாண்டங்கள் விரைவில் சூடேறுவனவா? ........
3. கம்பளி ஆடை வெயிற் காலத்துக்கு நல்லதா? ........
4. எல்லோருடைய கை ரேகைகளும் ஒரே மாதிரி யானவையா? ........
5. பயிர்களுக்குப் பசளை இடுதல் அவசியமா? ........
6. வாகனங்கள் ஓடுவதற்கு டீசல் எண்ணெய் உபயோகிப்படுகிறது. ........
7. ஆயுதங்களினுல் வேலையை இலகுவாகச் செய்யலாம் ........

VI. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) சூரியன் நிற்கும் திசையைக் காட்டும் பூ எது?

தாமரை, மல்லிகை, சூரியகாந்தி, சண்பகம்.

(ஆ) இலங்கையின் வடக்கில் உள்ள நாடு எது?

சிங்கப்பூர், சீனு, அமெரிக்கா, இந்தியா.

(இ) யாழ்ப்பாணத்தில் கைத்தொழிற்பேட்டை எங்கே உண்டு?

காங்கேசன்துறை, அச்சுவேலி, காரைநகர், நல்லூர்.

(ஈ) துருவ நட்சத்திரம் எத்திசையில் உள்ளது?

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு.

(உ) நெருப்பின் வேறு பெயர் என்ன?

விளக்கு, மின்சாரம், சூடு, தீ

(ஊ) சட்டி பானைகளை எங்ஙனம் கூறுவர்?

தளபாடங்கள், மட்பாண்டங்கள், ஆயுதங்கள், அணிகள்.

(எ) கூடுதலான சம்பளம் பெறுபவர் யாவர்?

தபாலதிபர், தபாற்காரர், தந்திக்காரர், வான் சாரதி.

(ஏ) வானவில்லில் உள்ள நிறங்கள் எத்தனை?

நான்கு, பத்து, ஏழு, ஒன்பது.

(ஐ) வீட்டில் உள்ளவருள் வயதில் குறைந்தவர் யார்?

பாட்டா, தம்பி, நான், அக்கா, அம்மா, அப்பா.

# அப்பியாசம் நான்கு

I. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) கிருமிநாசினி என்றால் என்ன ?

1. அது தளபாடங்களுக்குப் பூசும் மை
2. பயிர்களுக்குப் போடும் பசளை
3. பூச்சிகள் புழுக்களைக் கொல்லும் மருந்து
4. அதிக விளைவை உண்டாக்கும் தானியம்

(ஆ) கம்பளி ஆடைகளை எதனால் செய்கிறார்கள் ?

1. ஆட்டின் மயிரால்
2. பருத்திப் பஞ்சினால்
3. பட்டு நூலினால்
4. நைலோன் நூலினால்

(இ) கமக்காரர் என்று சொல்லுவது யாரை ?

1. உழவுத் தொழில் செய்பவரை
2. மட்பாண்டஞ் செய்பவரை
3. தளபாடங்கள் செய்பவரை
4. நெசவுத் தொழில் செய்பவரை

## II. ஒரு சொல்லில் விடை தருக.

1. உங்கள் ஊரில் அதிகமாக விளையும் பயிர் எது? ..................
2. உங்கள் வீட்டில் வயது கூடியவர் யாவர்? ..................
3. ஆபரணம் செய்ய உதவும் உலோகம் எது? ..................
4. பௌத்த சமயத்தவர் வணங்கும் இடம் எது? ..................
5. நாம் இரவில் எத்தனை மணி நேரம் உறங்குவது நல்லது? ..................
6. பேனின் முட்டையின் பெயர் என்ன? ..................

## III. விடை தருக.

1. நீர் நிலைகள் என்பன யாவை?

______________________________

2. சத்துள்ள பழங்கள் யாவை?

______________________________

3. பெண்கள் அணியும் ஆபரணங்கள் யாவை?

______________________________

4. ஆடை தயாரிக்க உதவும் துணிகள் யாவை?

______________________________

5. வீதியில் போகும் பலவித வாகனங்கள் யாவை?

______________________________

6. சீருடை அணிந்த உத்தியோகத்தர் யாவர்?

______________________________

IV. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கடலில் எடுக்கப்படும் உணவுப் பொருள்கள் எவை ?

   .................................... ....................................

2. வற்றல் போட உதவும் காய் கறிகள் எவை ?

   .................................... ....................................

3. தபால் கந்தோரில் நடைபெறும் வேலைகள் எவை ?

   .................................... ....................................

4. பொதுமக்கள் அதிகமாகக் கூடி நிற்கும் வைபவங்கள் எவை ?

   .................................... ....................................

5. உணவுக்குச் சுவையூட்டும் சரக்குகள் எவை ?


   .................................... ....................................

V. பின்வரும் வாக்கியங்கள் சரியானவையாயின் "ஆம்" என்றும் பிழையானவையாயின் "இல்லை" என்றும் எழுதுக.

1. ஆமை மிக வேகமாக வளர்ந்து போகும் ..........
2. ஊரும் பிராணிகளுள் முதலை மிகவும் பெரியது ..........
3. சில பூக்கள் இரா வேளையிலும் மலரும் ..........
4. திருக்கோணமலை மேல் மாகாணத்தில் உள்ளது ..........
5. இலங்கையினுள் மலேரியா நோய் பரவுகிறது ..........
6. இயந்திரக் கலப்பை டிராக்டர் எனப்படும் ..........
7. வண்டிகளின் இயக்கத்துக்குச் சில்லுகள் அவசியம் ..........



இலையான்



நுளம்பு



மூட்டுப்பூச்சி



பேன்

## VI. படத்தைப் பார்த்து விடை எழுதுக.

1. இவற்றுள் பறந்து திரிவன எவை? ......................
2. நோய்களைப் பரப்புபவை எவை? ......................
3. கட்டில் கதிரையில் குடியிருப்பது எது? ......................
4. எமது தலையில் குடி இருப்பது எது? ......................
5. எட்டுக் கால் உள்ளது எது? ......................
6. இரவில் அதிகமாகப் பறந்து திரிவது எது? ......................
7. அழுக்குள்ள இடங்களில் இருப்பது எது? ......................
8. எங்கள் உணவில் வந்து அமர்வது எது? ......................
9. மலேரியா நோயைப் பரப்புவது எது? ......................
10. வயிற்றுளைவு நோயைப் பரப்புவது எது? ......................

# அப்பியாசம் ஐந்து

I. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) ஒட்டுண்ணிகள் என்பன யாவை ?

1. அவை ஒரு சாதிப் பறவைகள்

2. அவை ஒரு சாதி மிருகங்கள்

3. அவை வேறு மரங்களில் உண்டாகி வளரும் தாவரங்கள்

4. அவை இறக்குமதியாகும் உணவுவகைகள்

(ஆ) வெளியே தெரியும் வேர்கள் உள்ள தாவரங்கள் எவை?

1. வெற்றிலைக்கொடி, மிளகுக்கொடி

2. வெங்காயம், வெள்ளைப்பூடு

3. வாழை, மரவள்ளி

4. பலாமரம், மாமரம்

(இ) ஊர்ந்துதிரியும் பிராணிகளிற் கொடியவை எவை ?

1. முதலை, பாம்பு

2. நத்தை, பல்லி

3. ஆமை, அட்டை

4. எறும்பு, நுள்ளான்

II. ஒரு சொல்லில் விடை தருக.

1. உங்கள் ஊரின் பெயர் என்ன? ..............................

2. மிக வேகமாகப் போகும் வாகனம் எது? ..............................

3. அதிகமாகக் கசங்கும் துணி எது? ..............................

4. எல்லாச்சத்துக்களும் உள்ள உணவு எது? ..............................

5. பாடசாலையில் தண்ணீர் அதிகஞ் சேரும் இடம் எது? ..............................

6. வலை பின்னும் பூச்சி எது? ..............................

III. விடை தருக.

1. எஞ்சின்களின் இயக்கத்துக்குச் சக்தி தருவன யாவை?

..............................

2. தோட்டக்காரர் உபயோகிக்கும் ஆயுதங்கள் எவை?

..............................

3. கடலில் மிதந்து போகும் வாகனங்கள் எவை?

..............................

4. குளங்கள் அதிகமாக வெட்டிய மன்னர்கள் யாவர்?

..............................

5. சிங்களவர் அதிகமாக வாழும் இடங்கள் எவை?

..............................

IV. பின்வரும் வினுக்களுக்கு ஒரு சொல்லில் விடை தருக.

1. வெள்ளைக்காரரை வேறெங்ஙனம் கூறுவர்? ..............
2. தன்னைச்சுற்றும் பூமி வேறெதனைச் சுற்றிவருகிறது? ..............
3. பூமியைச் சுற்றிவரும் உபகிரகம் எது? ..............
4. நிலத்தைக் கொத்துவதற்கு உதவும் கருவி எது? ..............
5. பல வர்ணங்கள் உள்ள வடிவான பூச்சி எது? ..............
6. சந்திரனுக்கு வழங்கும் வேறு பெயர் ஒன்று. ..............
7. சூரியனுக்கு வழங்கும் வேறு பெயர் ஒன்று. ..............
8. அம்மா, அப்பா இருவருக்கும் பொதுவான ஒரு பெயர். ..............
9. கூடு கட்டத் தெரியாத ஒரு பறவை. ..............
10. இரவில் பறந்து திரியும் ஒரு பறவை. ..............

V. விடுபட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அம்மா | — தாயார் | அப்பா | — | .............. |
| 2. | தேனீ | — பூச்சி | கிளி | — | .............. |
| 3. | தேயிலை | — .............. | பலா | — | மரம் |
| 4. | கண்டி | — மலைநாடு | .............. | — | கரைநாடு |
| 5. | நுளம்பு | — மலேரியா | இலையான் | — | .............. |
| 6. | மல்லிகை | — வெள்ளை | .............. | — | மஞ்சள் |
| 7. | கொக்கு | — வெள்ளை | கிளி | — | .............. |
| 8. | தேவாலயம் | — கிறிஸ்தவர் | பள்ளிவாசல் | — | .............. |
| 9. | நெடுஞ்சாலை | — பஸ்வண்டி | ஆகாயவிமானம் / நீலவானம் | — | .............. |
| 10. | ஒற்றுமை | — வாழ்வு | பகை | — | .............. |

VI. சரியான விடையின்கீழ்க் கீறிடுக.

(அ) துருவ நட்சத்திரம் காட்டும் திசை எது?

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு.

(ஆ) வீணையும் யாழும் என்ன வாத்தியக் கருவிகள்?

நரம்புக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி.

(இ) நாம் ஓசை, அல்லது ஒலி என்பது எதனை?

சத்தம், பார்வை, காட்சி, உணர்ச்சி.

(ஈ) கொடியாக வளரும் தாவரம் எது?

அடம்பன், தாழை, மரவள்ளி, அலரி.

(உ) மிண்டிவேர் உள்ள தாவரம் எது?

தாழை, ஆல், தாமரை, துளசி.

(ஊ) கொத்துக் கொத்தாக மலரும் பூ எது?

முல்லைப்பூ, அல்லிப்பூ, தாமரைப்பூ, சூரியகாந்திப்பூ.

(எ) நீண்ட காம்புள்ள பூ எது?

மல்லிகைப்பூ, திருவாத்திப்பூ, செவ்வரத்தைப்பூ, முல்லைப்பூ.

(ஏ) பழங்களை வேறு எவ்விதம் கூறுவர்?

காய்கள், கனிகள், பிஞ்சுகள், அரும்புகள்.

(ஐ) பிளவுபடாத காற்குளம்பு உள்ள மிருகம் எது?

ஆடு, மாடு, எருமை, குதிரை, மான்.

# அப்பியாசம் ஆறு

1. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) ஆடு, மாடு, மான் இவை எத்தகைய மிருகங்கள்?

1. இரை மீட்கும் மிருகங்கள்.
2. கொம்பில்லாத மிருகங்கள்.
3. எமக்குத் தீமை செய்யும் மிருகங்கள்.
4. கூரிய நகங்கள் உள்ள மிருகங்கள்.

(ஆ) எவ்வித நோய்கள் உள்ளவர் வெளியே போதலாகாது.

1. தடிமன், தலையிடி.
2. பற்கொதி, முரசுவீக்கம்.
3. சின்னமுத்து, கொப்புளிப்பான்.
4. வாதம், வயிற்றுக்குத்து.

(இ) இலங்கையின் பழைய தலைநகரங்கள் எவை?

1. கொழும்பு, நீர்கொழும்பு.
2. மன்னார், முல்லைத்தீவு.
3. அனுராதபுரம், பொலநறுவை.
4. வவுனியா, மதவாச்சி.

## II. ஒரு சொல்லில் விடை தருக.

1. பாலிலிருந்து பெறப்படும் கொழுப்புப் பொருள் எது? ..................
2. கிளைகள் இல்லாத பெரிய மரம் எது? ..................
3. ஊர்ந்து திரியும் பெரிய பிராணி எது? ..................
4. பூமியைச் சுற்றி வரும் உபகிரகம் எது? ..................
5. கமக்காரருக்கு உதவி செய்யும் புழு எது? ..................
6. வண்ணத்துப் பூச்சியின் உணவு என்ன? ..................

## III. விடை தருக.

1. தமிழர் அதிகமாக வாழும் இடங்கள் எவை?

______________________________

2. முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடங்கள் எவை?

______________________________

3. புத்தசமயத்தவர் அதிகமாக வழிபடும் இடங்கள் எவை?

______________________________

4. தேவாரம் பாடி அருளிய நாயன்மார் யாவர்?

______________________________

5. சைவசமயத்தவர் வழிபடும் இடங்கள் எவை?

______________________________

## IV. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

1. செடிகளாய் வளரும் காய்கறிப்பயிர்கள் எவை?

.......................................................................................................

2. நுனி இலைகள் உள்ள தாவரங்கள் எவை?

.......................................................................................................

3. கோதுமைமாவிலிருந்து செய்யும் உணவுகள் எவை?

.......................................................................................................

4. உணவுக்கு முட்டை தரும் பறவைகள் எவை?

.......................................................................................................

5. இலங்கையில் பெரிய நெல்வயல்கள் உள்ள இடங்கள் எவை?

.......................................................................................................

## V. விடப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

1. மரம் அரிவதற்கு.......................உபயோகப்படுகிறது.
2. துணியை வெட்டுவதற்கு .....................பயன்படுகிறது.
3. ............ வெட்டக் கொந்தாலி பயன்படுகிறது.
4. பல குடும்பங்கள் சேர்ந்து வாழும்போது............எனப்படும்.
5. இலங்கைக்கு ................ என்றும் பெயர் உண்டு.
6. .................... சமூகப்பற்று உள்ள பறவை.
7. புத்தசமயத்தைப் போதித்தவர்.......................

1. வயலில் விளையும் உணவுத்தானியம் எது ?

கத்தரி, வெண்டி, தக்காளி, நெல்.

2. அவரை இனத்துப் பயிர் எது ?

குரக்கன், சாமை, சோயா, கம்பு.

3. பிறநாட்டு உணவுத்தானியம் எது ?

கம்பு, சோளம், கோதுமை, இறுங்கு.

4. தோடை இனத்துப் பழம் எது ?

வில்வம், விளா, மாதுளை, நாரத்தை.

5. பெருந் தோட்டப்பயிர் என்பது எது ?

தேயிலை, முந்திரிகை, மாதுளை, றம்புட்டான்.

6. யாழ்ப்பாணத்தில் உண்டாகும் விலைப்பயிர் எது ?

குரக்கன், புகையிலை, பலா, தோடை.

7. அதிக பிரயோசனந்தரும் பயிர் எது ?

தென்னை, மா, புளி, வேம்பு, பலா.

8. சுயஒளி உள்ளது எது ?

நட்சத்திரம், சந்திரன், பூமி, செவ்வாய், புதன்.

9. அருந்ததி என்பது யாது ? அது ஒரு

கண்டம், சமுத்திரம், நட்சத்திரம், கிரகம், கப்பல்.

# அப்பியாசம் ஏழு

1. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(அ) எல்லாள மன்னன் சிறப்புப் பெற்றது ஏன்?

1. நீதி தவறாது அரசாண்ட காரணத்தால்.
2. பிற நாடுகளை வென்று பெரியவீரனானதலால்.
3. அவர் சோழநாட்டில் இருந்து வந்தபடியால்.
4. அவர் அநுராதபுரத்தை ஆண்ட காரணத்தால்.

(ஆ) தேவநம்பியதீசன் ஆட்சியில் நிகழ்ந்தது என்ன?

1. பெரிய புயல் வீசியது.
2. புத்தசமயம் இலங்கையில் பரவியது.
3. வயல்களில் அதிக நெல் விளைந்தது.
4. மக்கள் நோயின்றி வாழ்ந்தார்கள்.

(இ) இ. போ. ச. என்பதன் கருத்து என்ன?

1. இன்றைக்குப் போயாவும் சனிக்கிழமையும்.
2. இந்த வண்டியில் போகச் சரிவராது.
3. இலங்கைப் போக்குவரத்துச் சபை.
4. இருந்து போவதற்குச் சரிவராது.

II. ஒரு சொல்லில் விடை தருக,

1. மஞ்சள், சுண்ணாம்பு கலந்தால் உண்டாகும் நிறம் என்ன ? ..................

2. நீரில் உண்டாகும் பூங்கொடி எது ? ..................

3. மலேரியா நோயைப் பரப்பும் பூச்சி எது ? ..................

4. சூரியன் உச்சியில் வரும் நேரம் என்ன ? ..................

5. பரந்த கிளையுள்ள பெரிய மரம் எது ? ..................

6. மலர்களில் தேன் சேர்க்கும் பூச்சி எது ? ..................

III. விடை தருக.

1. சைவசமயத்தவரின் கொண்டாட்ட தினங்கள் எவை ?

..................................................

2. நல்ல வாசனை உள்ள பூக்கள் எவை ?

..................................................

3. பெரியனவாய் உள்ள பூக்கள் எவை ?

..................................................

4. கிறிஸ்தவ சமயத்தவரின் கொண்டாட்ட தினங்கள் எவை?

..................................................

5. முஸ்லிம் சகோதரரின் கொண்டாட்ட தினங்கள் எவை ?

..................................................

IV. விடை தருக.

1. மூலவேர் என்னும் ஆணிவேர் உள்ள மரங்கள் எவை ?

........................................................................................................

2. கூட்டாக அமைந்த இலைகள் உள்ள மரங்கள் எவை ?

........................................................................................................

3. தாவரங்களின் வளர்ச்சிக்கு அதிகம் தேவையானவை எவை?

........................................................................................................

4. மூட்டுப்பூச்சி குடியிருக்கும் இடங்கள் எவை ?

........................................................................................................

5. அதிக பால் தரும் பசுமாட்டு இனங்கள் எவை ?

........................................................................................................

V. விடப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

1. புத்தசமயத்தவர் ........................ தினத்தைக் கொண்டாடுவர்.

2. சைவசமயத்தவர் ........................ பூசுதல் வழக்கம்.

3. கிறிஸ்தவசமயத்தவர் ........................ வாரங்களில் வழிபாடு செய்வர்.

4. முஸ்லிம்களின் சமயம் ........................ எனப்படும்.

5. வளி அசையும்போது அதைக் ........................ என்கிறோம்.

6. ........................ வெளிச்சத்தையும் சூட்டையும் தருகிறது.

7. கிரகங்களைக் ........................ என்றும் வழங்குவர்.

## VI. கூட்டத்தில் சேராத ஒன்றின் கீழ்க் கீறிடுக.

1. தேயிலை, கோப்பி, கொக்கோ, இறப்பர்.
2. மிளகு, மல்லி, சீரகம், வெங்காயம், கடுகு.
3. தென்னை, பனை, கமுகு, கித்துள்.
4. குப்பைமேனி, நெருஞ்சி, நாயுண்ணி, நாயுருவி.
5. ஆல், அரசு, வேம்பு, பூவரசு.
6. பூவரசு, கிழுவை, இலுப்பை, முருக்கு.
7. பாகல், புடோல், கத்தரி, பீர்க்கு.
8. தும்பி, சிலந்தி, தேனீ, இலையான்,
9. காகம், கிளி, புறா, தீக்கோழி.
10. ஆடு, மாடு, பூனை, எருமை,

## VII. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கடற்கரையில் நீர் காணக் கூடியவை எவை?

______________________________

2. பெரிய பட்டணத்தில் நீர் காணக் கூடியவை எவை?

______________________________

3. நீர் கண்ட பிறநாட்டுப் பொருள்கள் யாவை?

______________________________

4. உங்கள் ஊரிலிருந்து ஏற்றுமதியாவன யாவை?

______________________________

5. எங்கள் நாட்டில் இருந்து ஏற்றுமதியாவன எவை?

______________________________

## இப்பொழுது விற்பனையாகின்றன!

# மூன்றும் வகுப்புக்குரிய பயிற்சி நூல்கள்

## புதிய பதிப்புகள்

புதிய பாடத்திட்டத்துக்கமைய அனுபவம் மிக்க ஆசிரியர்களால் இலகுவான நடையில் எழுதப்பெற்றன.

1. **பாஷைப்பயிற்சியும் விளக்கமும்**
   பண்டிதர் க. இராசையா அவர்கள்.
2. **ஒன்றிணைந்த சுற்றுடற்கல்விப் பயிற்சி**
   திரு. க. சி. குலரத்தினம் அவர்கள்
3. **சைவசமய பாடப் பயிற்சி**
   பண்டிதர் செ. நடராசா அவர்கள்.
4. **புதுமுறைத் தமிழ்மொழிப்பயிற்சி**
   பண்டிதர் செ. நடராசா அவர்கள்.
5. **புதியமுறைக் கணிதப்பயிற்சி**
   பண்டிதர் செ. நடராசா அவர்கள்.
6. **English Language Test Papers**
   By C. S. Kularatnam

பதிப்பாளர்

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.